எம்.சி.ஓ.பி எண்: 4722 /2023 தேதி: 23.02.2026

மசா. : 1

பெயர் : மாரியம்மாள்

க /பெ. : பரமசிவம்

வயது : 34

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து குறித்து குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி ஏதும் அளிக்கவில்லை. குற்ற வழக்கு பற்றி விவரம் தெரியாது. விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் நான் தான் கொடுத்தேன். புகார் இரண்டு நாட்கள் கழித்து கொடுக்கப்பட்டது என்றால் சரி. சொற்பகாயத்திற்கு முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதலில் தனியார் மருத்துவமனைக்கு என் மகனை அழைத்து சென்றேன். அதன் பிறகு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் மகனுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததால் மருத்துவ செலவு ஏற்படவில்லை என்றாலும்அதற்கான பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. விபத்து குறித்த மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்தால் மோட்டார் சைக்கிள் மீது தவறு இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் மகன் தனியாகதான் சென்றார். என் மகன் சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்த சாலை கிராமத்து உள் சாலை ஆகும். அந்த சாலையில் பாதசாரிகள் கடக்கும் கோடு இல்லை என்றால் சரி. மோட்டார் சைக்கிளின் பதிவெண் 3வது நபர் சொல்லிதான் தெரியும். விபத்து எப்படி நடந்தது என்று 3வது நபர் சொல்லியதன் பெயரில் தெரிந்து கொண்டதால் நான் நேரடியாக சாட்சி சொல்லமுடியாது என்றால் சரி. விபத்து சமயத்தில் என் மகனுக்கு 10 வயது 5ம் வகுப்பு படித்து கொண்டிருந்தார். பள்ளி சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மற்ற இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். எனக்கும் என் கணவருக்கும் தனிப்பட்ட வருமானம் உள்ளது. சாலையில் கடை வைத்திருந்தவர் விபத்து குறித்து எனக்கு தகவல் கொடுத்தார். 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் ஓன் டேமேஜ் கிளைம்யில் அடையாளம் தெரியாத ஒரு ஆட்டோவும் இந்த விபத்தில் ஈடுபட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஆட்டோவின் பதிவெண் தெரியாததால் இரண்டு நாட்கள் காலாதமாதமாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

அடையாளம் தெரியாத ஆட்டோவின் உரிமையாளர் அதன் காப்பீட்டு நிறுவனத்திலிருந்து தான் நான் இழப்பீடு கேட்கமுடியும் என்றாலும் இந்த எதிர்மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்பு இல்லை என்றாலும் சரியல்ல. மோட்டார் சைக்கிள் மீது கவனக்குறைவு இல்லை என்பதால் இந்த எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க தேவை இல்லை என்றாலும் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.